1979 மார்ச் 30]

*திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினை குறித்து கடந்த சனிக்கிழமையன்று எதிர்க்கட்சிகளினுடைய தலைவர்கள் அனைவரும் வழக்கறிஞர்கள் சார்பாக முறையீட்டை வைத்து, வழக்கறிஞர்களுக்கும், காவல் துறையினருக்கும் ஒரு நீண்ட மோதுதலை நிலையானதாக ஆக்கிவிடக் கூடாது என்ற கருத்தின் அடிப்படையில் உடனடியாக இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டுமென்று வலியுறுத்தினோம். அதை வலியுறுத்தியதற்கு மேலும் வலிமையூட்டுகின்ற வகையில் இந்த அவையிலே அமைதியான முறையிலே நாங்கள் எழுந்து நின்று இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காணுகின்ற வரையில் நாங்கள் உட்காருவதாக இல்லை என்றும் குறிப்பிட்டோம். அப்போது முதல் அமைச்சர் அவர்களும் இந்த மன்றத்திலே இருந்தார். அப்போது அவை முன்னவர் முதலமைச்சர் சார்பாகப் பொறுப்பேற்றுக்கொண்டு பதில் அளித்தார். செவ்வாய் அன்று மாலைக்குள் இந்தப் பிரச்சினை தீர்க்கப்பட்டுவிடும் என்று குறிப்பிட்டார்கள். நான் கூட சொன்னேன். செவ்வாய் வெறும் வாயாகி விடக் கூடாது என்று. அவை முன்னவர் அவருக்கே உரிய தமிழ் சொல்லாடல் திறமையின் காரணமாக செவ்வாய்க்கிழமையன்று நீ வெல்வாய் என்று சொன்னார். நானும் அதற்கு அடிக்கடி நீ அப்படித்தான் சொல்வாய் என்றேன். ஆனால் நான் அன்றைக்குச் சொன்னது தான் உண்மையாகிவிட்டது. பிரச்சினை தீர்க்கப்படவில்லை. அதற்கு பதிலாக அரசின் சார்பாக ஒரு அறிக்கையைத் தான் படித்தார்கள். பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் என்று அவர் சொன்னதை எப்படி நாங்கள் எடுத்துக் கொண்டோம். எப்படி நம்பினோம் என்றால், எதிர்க்கட்சிகளின் தலைவர்களையும் வழக்கறிஞர்களின் பிரதிநிதிகளையும், அரசாங்கத்தினுடைய சார்பில் அமைச்சர்களையும் உட்கார வைத்துப் பேசி திங்கள் அல்லது செவ்வாய்க் கிழமைக்குள் இந்தப் பிரச்சினை முடிந்து வழக்கறிஞர்கள் நீதிமன்றங்களுக்குத் திரும்பினார்கள் என்ற நிலை ஏற்படும் என்ற நம்பிக்கையோடு தான் அவை முன்னவர் அளித்த வாக்குறுதியை அன்றைக்கு நாங்கள் எடுத்துக் கொண்டோம். ஆனால், இன்றைக்கு அதற்கு மாறாக நிலைமைகள் தலைகீழாகி விட்டதைத் தான் பார்க்கிறோம். நேற்றுக் கூட ஒரு வழக்கு சம்பந்தமாக நான் நீதிமன்றத்திற்குச் சென்றபோது ஒரு ராணுவ முகாமிற்குள் நுழைகிறோமோ என்று ஐயம்படத் தக்க அளவிற்கு போலீஸார் நூற்றுக் கணக்கில் அங்கே குவிக்கப்பட்டிருந்ததை நான் கண்டேன். அவைகளைப் பற்றி எல்லாம் மற்ற எதிர்க்கட்சித் தலைவர்கள் இங்கே தெளிவாகக் கூறியிருக்கிறார்கள். முதலமைச்சர் திருநெல்வேலியிலே நிருபர்களிடத்திலே பேசியதாக தினத்தந்தி பத்திரிகையிலே செய்தி வந்திருக்கிறது. ''வக்கீல்கள் நேரடியாக தலைமை நீதிபதியைச் சந்தித்து அவருடைய கருத்தைத் தெரிந்து கொள்வது நல்லது'' என்று முதலமைச்சர் பதில் அளித்து இருக்கிறார். அது எவ்வளவு சரியான தகவல் என்று எனக்குத் தெரியாது. நாங்கள் கேட்பது எல்லாம் ஒரு உயர் நீதி மன்ற நீதிபதியை, அவர் ஓய்வு பெற்றவராக இருந்தாலும், நியமித்து அவரைக்

[திரு. மு. கருணாநிதி] [1979 மார்ச் 30

கொண்டு ஏன் இந்த விசாரணையை நடத்தக் கூடாது என்பது தான். ஆளுங்கட்சியினுடைய பொதுச் செயலாளர் கூட பேசிய தாக பத்திரிகையிலே செய்தி படித்தேன். நாவலர் அவர்கள் பேசியதாக, அண்ணாமலைப் பல்கலைகழகச் சம்பவம் பற்றி கழக ஆட்சியிலே ஓய்வு பெற்ற நீதிபதியை நியமிக்கவில்லையா என்று கேட்டு இருக்கிறார். அப்போது நியமிப்கப்பட்டது உயர் நீதி மன்ற ஓய்வு பெற்ற நீதிபதி. இப்போது வழக்கறிஞர்கள் பிரச்சினைப்பற்றி விசாரிக்க நியமிக்கப்பட்டு இருப்பது ஓய்வு பெற்ற மாவட்ட நீதிபதி. இங்கே நண்பர் ஜேம்ஸ் அவர்களும் மற்றவர்களும் எடுத்துக் காட்டியதைப் போல. ஓய்வு பெற்ற மாவட்ட நீதிபதி வழக்கறிஞராகிவிடுகிறார். மாவட்ட நீதிபதி இப்போது பணியாற்றிக் கொண்டிருக்கிறவரைப் போட வேண்டும் அல்லது ஓய்வு பெற்றவரைத்தான் போடவேண்டுமென்றால் உயர்நீதிமன்ற ஓய்வு பெற்ற நீதிபதியைப் போட வேண்டும், இது வழக்கறிஞர்கள் சமரஸத்திற்கு வர இந்த அரசுக்கு நாங்கள் எடுத்து வைக்கிற யோசனை. சஸ்பென்ட் செய்ய முடியாது, தற்காலிக வேலை நீக்கம் கூடாது என்று அரசு முடிவைத் தெரி வித்து விட்ட காரணத்தாலே எதிர்க் கட்சிகளின் சார்பாக எங்க ளுடைய சமரஸ யோசனை, அவர் திருப்பரங்குன்றத்திலிருந்து தல்லாகுளத்திற்கு மாற்றிய நிலைக்கு முற்றிலும் மாறாக வேறு ஒரு மாவட்டததிற்கு அவரை வேலை மாற்றம் செய்கிறோம் என்று அரசு உறுதி அளித்தால் இந்தப் பிரச்சினை சுமுகமாகத் தீர்க்கப்பட்டுவிடும். ஜனநாயகத்திலே நீதித்துறை, சட்டமன்றத் துறை, நிர்வாகத் துறை இந்த மூன்றும் ஒரு அரசின் முக்கியமான அம்சங்கள். அதிலே ஒரு துறை இன்றைக்கு ஒழுங்காகச் செயல் படாத அளவிற்கு, செம்மையாக நடைபெறாத அளவிற்கு நிர்வாகத் துறை காரணமாக இருக்கிறது என்றால் அதை சட்ட மன்றத் துறை தான் ஒரு முடிவுக்குக் கொண்டுவர வேண்டும். சட்டமன்றத்திலே இருக்கிற எதிர்க்கட்சிகள் அனைத்தும் மிகுந்த பொறுப்புணர்ச்சியோடு அரசாங்கத்தோடு ஒத்துழைக்கின்ற வகை யில் நல்ல எண்ணத்தின் அடிப்படையிலே இந்தக் கோரிக்கைகளை

[முற்பகல் 10-50]

எடுத்து வைக்கிறோம். ஓய்வு பெற்ற நீதிபதியைத்தான் போட வேண்டுமென்றால் ஓய்வு பெற்ற உயர் நீதி மன்ற நீதிபதி யைப் போடுங்கள், அவரை வேலை நீக்கம் செய்ய முடியாது என்றால்—சஸ்பென்ஷன் செய்ய முடியாது என்றால்— வேறு ஒரு மாவட்டத்திற்காவது அந்த அதிகாரியை மாற்றுங்கள், இதற் காகவாவது இந்த அரசு உடன்படுமா என்று கேட்டுக் கொள் கிறேன்.

திரு. கே. கந்தசாமி : பேரவைத் தலைவரவர்களே, சட்ட மன்றத்திலுள்ள மற்றக் கட்சிகளைச் சேர்ந்த தலைவர் களும், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்களும், இந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்தின் முக்கியத்துவத்தையும், அவசியத்தையும் பற்றி மிகத் தெளிவாகக் குறிப்பிட்டார்கள். ஆகவே, காலத்தை முன்னிட்டு நான் சுருக்கமாகக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.